23-5-98
DINAMALAR

மெலட்டூர் பாகவத மேளா

# திரை கடல் ஓடியும் தில்லானா ஆடு

திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்பது மூதுரை. ஆனால் திரை கடல் ஓடி ஈட்டில் பெரும் பொருளை தான் கற்ற நடனக் கலைக்காக செலவிடும் ஒரு விசித்திரமான நபர் துபாய் நடராஜன். ஆகவே இவரைப் பொருத்தவரை திரைகடல் ஓடியும் தில்லானா ஆடு என்பதே பொருந்தும்.

மெலட்டூரில் ஆண்டு தோறும் இரண்டு அணியினர் தனித்தனியே பாகவதமேளா நாட்டிய நாடகம் நடத்தி வருகின்றனர். மகாலிங்கம் (மாலி) அணியினரின் பாகவத மேளா சில வாரங்களுக்கு முன் நடைபெற்றது. துபாயில் பணி புரியும் எஸ்.நடராஜன் நடத்தும் பாகவத மேளா கடந்த 20ம் தேதி துவங்கியது. இம்மாதம் 29ம் தேதி வரை மெலட்டூரில் பாகவதமேளா நடைபெறுகிறது.

பாகவத மேளா என்பது பக்திக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கும் ஒரு பழம்பெரும் கலை வடிவம். இக்கலையைப் பேணிக் காத்து வரும் ஒரு சிலரை ஊக்குவிக்க வேண்டியது நம் கடமை. மற்ற கச்சேரிகளை விமர்சிப்பது போல் அவர் வாசித்தது ஆகிரியா தன்யாசியா என்பன போன்ற எனது வழக்கமான குதர்க்க விமர்சனப் பாணிக்கு குட்பை சொல்லி விட்டு பக்தி பூர்வமான இக்கலை எப்படி நம்மை பரவசப்படுத்தியது என்பதை மட்டும் பார்ப்போம்.

பல ஆண்டுகளுக்கு முன்பு இந்த பாகவத மேளா நாட்டிய நாடகத்திற்கு தலைமை வகிக்க வந்த ஒரு முக்கிய பிரமுகர் நாட்டியம் முடிந்ததும் கீழ்க்கண்டவாறு புகழ்ந்துரைத்தார். இனி நான் மகிழ்ச்சியுடன் இறப்பேன். ஏனெனில் இறைவனை நேரில் காண முடியவில்லையே என்ற ஒரே ஒரு குறைதான் எனக்கு இருந்தது. பாகவத மேளாவைப் பார்த்த பின்பு அந்த குறையும் நீங்கிவிட்டது. இங்கு நான் பார்த்தவை வெறும்நாடக கதாபாத்திரங்களாக எனக்குத் தெரியவில்லை. உண்மையிலேயே கடவுளின் அவதாரமாகத்தான் தோன்றின என்பதுதான் அந்த பிரமுகரின் வார்த்தைகள் இவ்வாறு புகழாரம் சூட்டியவர் யாரோ ஒரு சாதாரண மனிதரல்ல. பிரபல இசை ஆராய்ச்சியாளரும் உச்ச நீதிமன்ற நீதிபதியுமான ஜஸ்டிஸ்.டி.எல். வெங்கட்ராம ஐயர்தான். இவ்வாறு சிலாகித்துக் கூறினார். ஜஸ்டிஸ் டி.எல்.வி. ஐயரின் இந்த வார்த்தைகள் எந்த அளவிற்கு உண்மை என்பதை மெலட்டூரில் அன்றைய தினம் பாகவத மேளாவில் பிரகலாதா சரித்திர நாடகத்தை பார்த்தவர்களால் நிச்சயம் உணர முடிந்தது.

பிரகலாதன் கதாபாத்திர அறிமுகத்திற்கு பாடப்பட்ட பைரவி ராகப் பாடல், இரண்யனின் மனைவி லீலாவதி பாடும் இந்த கோப எனத்துவங்கும் பரஸ்ராகப் பாடல், ஆகிரியில் நயகுணம்பு என்னும் சீசபத்யம் அதன் தொடர்ச்சியான ஏமனினே என்ற பாடல், சின்னி பாலுடனு பூமாதேவி கதா பாத்ரப்ரவேசத்திற்குப் பாடப்பட்ட காம்போதி ராகத்திலமைந்த பாமலாரா என்னும் பாடல் நரசிம்ம அவதாரத்திற்குப் பாடப்பட்ட தேவதேவ இதே சமயமய்யா என்னும் பூர்வி கல்யாணி ராகப்பாடல் ஆகியவை அன்றைய பிரகலாதாசரித்திர பாகவத மேளா நாட்டிய நாடக நிகழ்ச்சியில் குறிப்பிடத்தக்கவை.

இக்குழுவை நடத்திவரும் துபாய் எஸ்.நடராஜன் பிரகலாதனின் தாய் லீலாவதி வேடமேற்று பெண்களுக்கே உரிய அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு ஆகிய குணங்களை நளினத்துடன் வெளிப்படுத்தினார். நடராஜனின் சகோதரர் எஸ்.குமார் இரண்யனின் வேடம் தரித்து அசல் அசுரனாகவே மேடையில் காட்சியளித்தார். டாக்டர் பத்மா சுப்ரமணியத்தின் மாணவர் மெலட்டூர் ஸ்ரீகாந்த் பிரகலாதனாகவும் வேறு சில சிறிய வேடங்களிலும் தோன்றினார். பூமாதேவி வேடம் தாங்கிய விஜயமாதவனை ஆண் எனக் கூற முடியாத அளவிற்கு பெண்மையுடன் அழகாக ஆடினார்.

## இறைபணி

இந்நிகழ்ச்சிக்கு வீரராகவன் மற்றும் திருவையாறு சகோதரர்கள் வெங்கடேசன் - லஷ்மி நரசிம்மன் ஆகியோர் தமது இனிய குரலிசையால் இனிமை சேர்த்தனர். டாக்டர் பத்மா சுப்ரமணியத்தின் சகோதரரின் புதல்வர் பி.கண்ணன் சுத்தமத்தளம், கஞ்சிரா ஆகிய வாத்தியங்களை வாசித்தார். தனது பாட்டனார் அமரர் டைரக்டர் கே.சுப்பிரமணியம் பாகவத மேளாவில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்ததால் ஆண்டு தோறும் பாகவத மேளா நிகழ்ச்சிகளின் முதல் நாள் விழாவில் தான் கலந்து கொண்டு தனது பங்காக ஏதேனும் வாத்தியங்களை வாசித்து இறை பணி ஆற்றுவதாக திரு.பி.கண்ணன் தெரிவித்தார். நெல்லை பாலாஜி மிருதங்கம் வெங்கடேச பிரசாத் புல்லாங்குழல், மற்றும் ஆண்டார்கோயில் துரை வயலின் வாசித்தனர்.

## விடிய விடிய

முன்னதாக சென்னை நகர சபாக்களின் சம்மேளனத்தின் தலைவரும், சென்னை நாரதகான சபாவின் செயலர், வக்கீல் ஆர்.கிருஷ்ணசாமி விழாவை துவக்கிவைத்தார். தஞ்சை சரக டி.ஐ.ஜி., டோக்ரா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மற்றும் பல முக்கிய பிரமுகர்களும் கலை ரசிகர்களும் பக்தர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு விடிய விடிய நடைபெற்ற பிரகலாத சரித்திர நாடகத்தைக் கண்டு களித்தனர். நரசிம்ம அவதாரம் செய்து தூணிலிருந்து வெளிப்பட்ட போது நாம் ஒரு நாடகம் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வை மறந்து அனைவரும் கை கூப்பித் தொழுத காட்சி கண்களையும் மனதையும் விட்டு அகல மறுக்கிறது. இது வெறும் நாடகமல்ல. மறக்க முடியாத ஒரு ஆன்மீக அனுபவம்.

—ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்.

## உதவி இயக்குனர் தகவல்